

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 319 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 16 – செவ்வாய்க்கிழமை 30 ஜூன் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 319 : Thiruvalluvar Year - 2057 - Aani 16 - Tuesday 30 June 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00




## ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஒரு மாதத்திற்குள்ளேயே, அதல பாதாளம் போகும் சூழ்நிலை!

# தமிழ்நாட்டைக் காக்கும் கடமை தி.மு.க.விற்குத்தான் இருக்கிறது!

### முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் தலைமையில் 5000–க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்த நிகழ்வில்

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஜூன் 30–**

**“ஆட்சி மாற்றம் நிகழ்ந்த ஒரே மாதத்திற்குள்ளேயே, தமிழ்நாடு அதலபாதாளத்திற்குப் போகும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது” என்றும், “தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பும் கடமையும் தி.மு.கழகத்திற்குத்தான் அதிகமாக இருக்கிறது” என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, வானகரத்தில் நேற்று முன்தினம் முன்னாள் அமைச்சர் பெஞ்சமின் தலைமையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தி.மு.கழகத்தில் இணைந்த நிகழ்வில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**இந்நிகழ்வில் கழகத்தில் இணைந்தவர்களை வரவேற்று கழகத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

தாய்க் கழகமாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் மகிழ்ச்சியோடு, உறுதியோடு, உற்சாகத்தோடு வந்து இணைந்திருக்கும் உங்கள் அனைவரையும் முதலில் வருக! வருக! என நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தலைமைக் கழகத்தின் சார்பில் தலைமைத் தொண்டனாக உங்கள் அனைவரையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



### கலைஞர் அரை நூற்றாண்டு காலம் தாங்கிப் பிடித்த இயக்கம்!

எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து, பவள விழா கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். ஒரு முறை, இரண்டு முறை அல்ல; ஆறு முறை தமிழ்நாட்டை ஆட்சி செய்து, அனைத்து வகைகளிலும் இந்த மாநிலத்தை வளர்த்தெடுத்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள். நவீனத் தமிழ்நாட்டைக் கட்டமைத்த சிற்பியான முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், அரை நூற்றாண்டு காலம் தாங்கிப் பிடித்த தனிப்பெரும் இயக்கத்திற்கு நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள்.

### எம்.ஜி.ஆர். பொருளாளராக இருந்த இயக்கம் இது!

அதுமட்டுமல்ல, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்த கழகத்திற்கு வந்திருக்கிறீர்கள். அதுமட்டுமா, அவர் பொருளாளராக இருந்து செயல்பட்ட இயக்கத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டுத்தான் அவர் முதன்முதலில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்றார்.

தனிக்கட்சி கண்ட பிறகும், தலைவர் கலைஞர் அவர்களைச் சட்டமன்றத்தில் ஒருவர் பேரைக் குறிப்பிட்டுப் பேசிய போது, அன்றைக்கு சட்டமன்றத்தில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள், அதைக் கண்டித்தார். என்ன சொல்லிக் கண்டித்தார் தெரியுமா? “உங்களுக்கு நான் தலைவராக இருக்கலாம்; ஆனால் எனக்குத் தலைவர் கலைஞர் தான்” என்று சொல்லி, அந்த வார்த்தையை வாபஸ் வாங்கச் சொன்னார். இது வரலாறு! (கைதட்டல்)

### ‘நான் நடித்த நாடகத்திற்குத் தலைமையேற்றார் எம்.ஜி.ஆர்’!

எனக்கு என்ன பெருமை என்றால், நான் பள்ளிக்கூடத்தில் மாணவனாக படித்துக் கொண்டிருந்தபோது, சென்னை - சைதாப்பேட்டைப் பகுதியில், ஒரு பிரச்சார நாடகம் நடத்தினேன். அந்த நாடகத்திற்கு யார் தலைமை என்றால், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். அவரே நேரடியாக அந்த நாடகத்தைப் பார்க்க வந்தார்.

**தொடர்ச்சி 3–ஆம் பக்கம்**

### அறிவிப்பு மட்டும் போதுமா?

# விழிப்புணர்வு இல்லாமல் வெறிச்சோடிய போலியோ முகாம்கள்!

## குழந்தைகள் நலத் திட்டங்களிலும் த.வெ.க. அரசு மெத்தனமா?

திருவள்ளூர், ஜூன் 29–

இளம்பிள்ளை வாதம் (போலியோ) என்ற கொடிய நோயை முற்றிலுமாக ஒழிக்கும் நோக்கில் ஆண்டுதோறும் நடத்தப்படும் போலியோ சொட்டு மருந்து முகாம், குழந்தைகளின் எதிர்கால ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும் மிக முக்கியமான மக்கள் நலத்திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்தத் திட்டத்தின் வெற்றி, மருத்துவப் பணியாளர்களின் உழைப்பை மட்டுமல்லாமல், அரசு மேற்கொள்ளும் விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் சார்ந்துள்ளது.

இந்த நிலையில், திருவள்ளூர் மாவட்டத்தில் 1,493 மையங்களில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும் என்றும், 6,127 பணியாளர்கள் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் அரசு அறிவித்திருந்தது. ஆனால், மாவட்டத் தலைநகரிலேயே பல மையங்கள் பொது மக்கள் அறிவிப்புக்கும் செயல்பாட்டிற்கும் இடையிலான பெரிய இடைவெளியை வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

பல இடங்களில் பெற்றோர்களுக்கு முகாம் நடைபெறுவது பற்றிய தகவலே சென்றடையவில்லை என்றும், சில மையங்களில் செவிலியர்கள் இல்லாமல் பேனர்கள் மற்றும் மேசைகள் மட்டுமே இருந்ததாகவும் கூறப்படுகிறது. மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் குழந்தைகளுடன் சென்ற பெற்றோர்களை சாலையிலேயே அழைத்து வந்து சொட்டு மருந்து வழங்கிய சம்பவங்களும் காணப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் திமுக ஆட்சிகாலத்தில், போலியோ முகாம் நாட்களில் தெருமுனைப் பிரச்சாரம், ஒலிபெருக்கி அறிவிப்புகள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் வீடு தோறும் விழிப்புணர்வு, உள்ளாட்சி அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாடு ஆகியவற்றின் மூலம் பெற்றோர்கள் தாமாகவே குழந்தைகளை முகாம்களுக்கு அழைத்து வந்ததாக பலரும் நினைவுகூருகின்றனர். அதற்கு மாறாக, இந்த முறை பல இடங்களில் முகாம் நடைபெறுவதே மக்களுக்கு தெரியாத நிலை ஏற்பட்டதாக சமூக வலைதளங்களிலும் பொதுமக்களிடையிலும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

குழந்தைகளின் உயிர் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களில் கூட போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தால், மக்கள் நலத் திட்டங்களை அரசு எவ்வளவு முக்கியத்துவத்துடன் அணுகுகிறது என்ற கேள்வி எழுவது இயல்பானதே என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

விளம்பர அறிவிப்புகள் வெளியிடுவது மட்டுமே போதாது; அவை ஒவ்வொரு பெற்றோரையும் சென்றடையும் வகையில் களப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையெனில், மக்கள் நலத் திட்டங்கள் வெறும் ஆவணங்களிலும் செய்திக் குறிப்புகளிலும் மட்டுமே நிறைவடையும் அபாயம் இருப்பதாக சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.

குழந்தைகளின் ஆரோக்கியம் அரசியல் எல்லைகளைக் கடந்த ஒன்று. எனவே, போலியோ போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களில் எந்தவித அலட்சியத்திற்கும் இடமின்றி, முழுமையான விழிப்புணர்வு, நேரடி கண்காணிப்பு மற்றும் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அரசின் கடமை என்று பொதுமக்கள் வலியுறுத்துகின்றனர்.

# ரூ.2500 மகளிர் உரிமைத் தொகை குறித்து கேட்டதும் தெறித்து ஓடிய அமைச்சர்!

*விருதுநகர், ஜூன் 30 -*

*மகளிர் உரிமைத் தொகை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மழுப்பலாக பதில் அளித்து விட்டு அமைச்சர் ஜெகதீஸ்வரி நழுவியது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.*

*நம்ம ஒண்ணு கேட்டா நம்மள அசத்துற மாதிரி பதில் சொல்லும் காமெடி கலாட்டாக்களை த.வெ.க. அமைச்சர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.*

*இந்த நிலையில் விருதுநகர் அருகே புல்லல்கோட்டையில் போலியோ சொட்டு மருந்து முகாமினை துவக்கி வைத்த அமைச்சர் ஜெகதீஸ்வரியிடம், 2500 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை எப்பொழுது வழங்கப்படும் என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.*

*இதற்கு தொண்டை சரியில்லை என பதிலளித்து விட்டு அமைச்சர் நழுவினார்.*

### குட்கா கடத்தலில் குற்றவாளிகளுக்கு ஆதரவாக பேசிய ஆடியோ!

# தொடர் சர்ச்சைகளில் சிக்கிவரும் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன்!

*தூத்துக்குடி, ஜூன் 30 -*

*தொடர் சர்ச்சைகளில் சிக்கிவரும் திருவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் சரவணன் குற்றவாளிகளுக்கு ஆதரவாக பேசிய ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*

*தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் பகுதியில் த.வெ.க. கட்சியில் ஒன்றிய செயலாளராக இருப்பவர் குணசேகரன். இவர் ஆந்திராவில் இருந்து குட்கா உள்ளிட்ட புகையிலைப் பொருட்களை மொத்தமாக வாங்கி வந்து தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்வதாக கூறப்படுகிறது.*

*இந்நிலையில், அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தொலைபேசியில் த.வெ.க. திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் சரவணனை தொடர்பு கொண்டுள்ளார்.*

*அப்போது, குட்கா கடத்தலில் ஈடுபட்டுள்ள குணசேகரன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த இளைஞர் கோரி உள்ளார்.*

*ஆனால் கடைசிவரை சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மழுப்பலான பதிலையே தெரிவித்துள்ளார். தற்போது இந்த ஆடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.*